World Vision INDIA
Hope, Joy, and Justice for ALL Children

# வேர்ல்ட் விஷன் இந்தியா (டபிள்யூவி இந்தியா) விநியோகஸ்தர்களின் நடத்தை விதிமுறைகள்

*கடைசியாக புதுப்பிக்கப்பட்டது: நவம்பர் 2024*

*பதிப்பு 3.1*

வேர்ல்ட் விஷன் இந்தியா பொருட்களை கொள்முதல் செய்வதில் உயர்ந்த நெறிமுறைகளையும் தரங்களையும்

பின்பற்றுவதற்கு உறுதிபூண்டுள்ளது. இந்த நடத்தை விதிமுறைகள், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நெறிமுறைகள் மற்றும் வணிக நடைமுறைகளை உறுதிப்படுத்தும் கொள்கைகளை விவரிக்கின்றன. நன்கொடையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய, டபிள்யூவி இந்தியா விநியோகஸ்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அவர்களது கீழ் உள்ள ஒப்பந்தக்காரர்கள் இந்த விதிமுறைகளில் கையெழுத்திடவும், பின்பற்றவும் எதிர்பார்க்கிறது.

**டபிள்யூவி இந்தியா தனது விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வருவனவற்றை எதிர்பார்க்கிறது:**

**பணத்திற்கு மதிப்பை மேம்படுத்த முயற்சி செய்யுங்கள்** –

- ஒப்பந்த காலத்திலும்/அல்லது கொள்முதல் செயும்பொழுதும் விலையை குறைத்து கொடுத்து உதவுங்கள்
- தேவைகளை கருத்தில் கொண்டு விலை நியாயமானதக இருக்கவேண்டும்

**தொழில்முறை மற்றும் ஒருமைப்பாட்டுடன் செயல்படவும்** –

- விலை நிர்ணயம் செய்யும்போது நேர்மை தன்மையுடன் இருக்கவேண்டும்
- விநியோகஸ்தர்கள மற்றும் அவர்களின் கீழ் உள்ள - ஒப்பந்தக்காரர்களுடன் இணைந்து இந்த நடத்தை விதிமுறைகளை எந்தவித சமரசமும் இல்லாமல் பின்பற்ற வேண்டும்.
- டபிள்யூவி இந்தியாவுடன் நெறிமுறை சார் தொழில்முறை உறவை வளர்ப்பது
- பெருநிறுவன சமூகப் பொறுப்புக்கு அர்பணித்துக்கொள்வது

**பொறுப்புடன் இருக்கவும்** –

- விலை நிர்ணய அமைப்புகளை பயன்படுத்தி நியாயமான விநியோகத்தை உறுதி செய்யுங்கள்.
- எதிர்பாராத விளைவுகளுக்கு பொறுப்பேற்கவும் மற்றும் தவறுகளைப் பற்றி வெளிப்படையாக இருக்கவும்.

**டபிள்யூவி இந்தியாவுடன் ஒத்துப்போகவும்** –

- டபிள்யூவி இந்தியாவின் அனைத்து அலுவலகங்களிலும், ஏற்ற சூழ்நிலைகள் இல்லாத மண்டலங்கள் உட்பட
- வளர்ச்சி தாக்கத்திற்காக புதுமைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்ளவும்.

**நலன்களின் மோதலைத் தவிர்க்க ஒப்புக்கொள்ளவும்** –

- விநியோகஸ்தர் அல்லது ஒப்பந்தக்காரர், டபிள்யூவி இந்தியாவின் நலன்களுடன் மோதல் ஏற்படுத்தக்கூடிய அல்லது மோதலுக்கு வழிவகுக்கும் எந்தவொரு செயல் அல்லது தவிர்ப்பையும் செய்யக்கூடாது.
- விநியோகஸ்தர் அல்லது ஒப்பந்தக்காரர், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, டபிள்யூவி இந்தியாவின் எந்தவொரு அதிகாரி அல்லது ஊழியருடனும் வணிக உறவு, வணிக இணைப்பு, ஈடுபாடு, தொடர்பு, பதவி, நிதி நலன்களை பரிமாற்றமாகவோ அல்லது வேறுவிதமாகவோ வைத்திருக்கக் கூடாது.
- விநியோகஸ்தர் அல்லது ஒப்பந்தக்காரர், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, டபிள்யூவி இந்தியாவின் எந்தவொரு அதிகாரி அல்லது ஊழியரிடமிருந்து/க்கு பரிமாற்றமாகவோ அல்லது வேறுவிதமாகவோ எந்தவொரு பரிசு, கடனையும் பெறவோ அல்லது வழங்கவோ கூடாது.
- விநியோகஸ்தர் அல்லது ஒப்பந்தக்காரர், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, டபிள்யூவி இந்தியாவின் நலன்களின் மோதல் கொள்கையின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய வேறு எந்தவொரு பரிவர்த்தனையிலும் ஈடுபடக் கூடாது.

**சர்வதேச தொழிலாளர் மாநாடுகள் மற்றும் நாட்டு சூழலில் பொருந்தக்கூடிய தொழிலாளர் சட்டங்களை கடைப்பிடிக்கவும்.**

**வலுவான சுற்றுச்சூழல் கொள்கையை வைத்திருக்கவும்** –

- சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றவும்.

**ஊழல் மற்றும் லஞ்சத்திற்கு எதிரான நடவடிக்கைகள்** –

மிரட்டி பணம் பறித்தல், மோசடி, லஞ்சம் ஆகிய வற்றிற்கு எதிரான கடுமையான நெறிமுறை, மற்றும் வழிகாட்டுதல்களையும் பின்பற்றவும்
.

**டபிள்யூவி இந்தியாவின் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பாதுகாப்பு கொள்கையை கடைப்பிடிக்கவும்** –

- விநியோகஸ்தர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்கள், அவர்களது ஊழியர்கள் அல்லது கீழ் உள்ள ஒப்பந்தக்காரர்கள், டபிள்யூவி இந்தியாவின் திட்டங்களில் இவர்களில் யாரெல்லாம் குழந்தைகள் அல்லது பயனாளிகளை அணுகக்கூடியவர்களோ அல்லது அவர்களின் தனிப்பட்ட விபரங்களை அணுகக்கூடியவர்களோ அவர்களின் பாதுகாப்பு, தனியுரிமை மற்றும் நலன் கருதி அதை பாதுகாக்க வேண்டும் குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு உள்ளாக்கக்கூடிய குழந்தைகள் மற்றும் பின்தங்கியவர்கள்.

**டபிள்யூவி விநியோகஸ்தர்களின் நடத்தை விதிமுறைகள் ஒப்புதல் அறிக்கை**

கீழே கையெழுத்திடுவதன் மூலம், நான்/நாங்கள் டபிள்யூவி இந்தியாவின் விநியோகஸ்தர்களின் நடத்தை விதிமுறைகளை படித்து, புரிந்து, ஒப்புக்கொள்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறோம். எந்தவொரு மீறலும் வணிக உறவை முடிவுக்கு கொண்டுவர வழிவகுக்கும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.

**நிறுவன பிரதிநிதியின் பெயர் மற்றும் பதவியை எழுதவும்** **கையெழுத்து**

**நிறுவனம் பெயர்** **தேதி**